TNTS0E0008882014

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
செங்கோட்டை

**முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
**2025–ம் ஆண்டு ஜீன் திங்கள் 21 ம் நாள் சனிக் கிழமை**
இடைக்கால மனு எண்.10/2025
(இன்)
**அ.வ.எண்.118/2014**
**(CNR.NO:**TNTS0E0008882014**)**

சுடலையாண்டி ...மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. மூக்கன் (இறப்பு)

2. செயல் அலுவலர்,
இலஞ்சி பேரூராட்சி,
தென்காசி தாலுகா

3. தமிழக அரசு,
தென்காசி மாவட்ட ஆட்சி தலைவர் மூலம்,
தென்காசி மாவட்டம் ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 12.06.2025 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.கந்தசாமி அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.முத்துக்குமாரசாமி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில், பி.வா.சா.1–யை குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் வழக்கினை Reopen செய்யக்கோரி கட்டளை 18 விதி 17 CPC இன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

TNTS0E0008882014

2. **மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கினை இரண்டாம் தபசில் சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 குமார் பாண்டியன் என்பவர் கடந்த 26.03.2025 தேதியன்று முதல்விசாரணை செய்யப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக வேண்டி 02.04.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அந்த சமயத்தில் மனுதார/வாதி கேரளா மாநிலத்தில் தங்கியிருந்து வேலை பார்த்து வந்ததாலும், அன்றைய தினம் மனுதாருக்கு கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மனுதாரர்/வாதியால் அவரது வழக்கறிஞருக்கு வழக்கு விபரம் கூறி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய இயலவில்லை எனவும், மேற்படி குறுக்குவிசாரணை செய்யாதது வேண்டும் என்றே ஏற்பட்ட தவறு அல்ல எனவும், எனவே மேற்படி தவறுதலை மன்னித்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-யை குறுக்குவிசாரணை செய்யும் பொருட்டு அசல் வழக்கினை (Reopen) உத்தரவிடக்கோரி இம்மமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிருரையின் சுருக்கம்:-**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடியது.

உண்மையில் மனுதாரர் கேரளாவில் யாதொரு வேலையும் பார்த்து வரவில்லை எனவும், கேரளாவில் வைத்து உடல்நலக்குறைவு ஏற்பட்டு சிகிச்சை மேற்கொண்டதாக கூறுவதற்கு மனுதாரர்/வாதி தரப்பில் யாதொரு மருத்துவ குறிப்புகளும், மருத்துவ சீட்டுக்களும் தாக்கல் செய்யாத நிலையில், மனுதாரர்/வாதியின் கூற்று உண்மை இல்லை என்பது நன்கு துலங்கும் எனவும், எனவே மனுதாரரை மேற்படி வழக்கில்

TNTS0E0008882014

திரும்ப அழைத்து விசாரணை செய்வதற்காக வழக்கினை **Reopen** செய்யக்கூடியதில்லை எனவும், மனுதாரருக்கு இவ்வழக்கில் யாதொரு கட்சியும் கிடையாது எனவும், இந்த எதிர்மனுதாரர்களை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் நேரத்திலும், மனுதாரரால் வம்பாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் மனுவில் சான்றாவணங்களாக குறியீடு செய்யவேண்டி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தேவையில்லாத ஆவணங்கள் எனவும், எனவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யும்படி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

4. **பிரச்சனை:**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா, இல்லையா என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. **தீர்வு:**

அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.1 ஆக குமார் பாண்டியன் என்பவர் விசாரிக்கப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக 02.04.2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், குறுக்குவிசாரணை செய்யாததால் அன்றைய தினம் பி.வா.சா.1 குறுக்குவிசாரணை சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மனுவை பி.வா.சா.1–யை குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் வழக்கினை Reopen செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், இம்மனுவின் மனுதாரர்/வாதி அன்றைய தினம் கேரளாவில் தங்கியிருந்து வேலை பார்க்கவில்லை, கேரளாவில் சிகிச்சை எடுத்தற்கும் எந்த மருத்துவ ஆணமும் தாக்கல் செய்யவில்லை.

TNTS0E0008882014

வழக்கில் நல்ல கட்சி இல்லை என்பதால், காலம் கடத்த வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளதாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், மனுவில் பி.வா.சா.1–யை குறுக்குவிசாரணை செய்யமுடியாமல் போனதற்கு சொல்லப்பட்ட காரணமானது, மனுதாரர்/வாதி அன்றைய தினம் கேரளாவில் வேலை பார்த்து வந்ததாகவும், மேலும் அன்றைய தினம் மனுதாரர்/வாதிக்கு வயிற்று போக்கு ஏற்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்ததாகவும் சொல்லப்பட்டிருந்தது. அதேவேளையில் மேற்படி சங்கதிகள் உண்மையில்லை என எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆட்சேபித்திருந்தாலும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பதால், மனுதாரர்/வாதி தரப்பில் பி.வா.சா.1–யை குறுக்குவிசாரணை செய்வதற்காக அசல் வழக்கினை Reopen செய்தால் தான், அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையை முழுமையாக தீர்வு காணமுடியும்.

மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால், மனுதாரர்/வாதிக்கு ஒரு வாய்ப்பு அளித்து இம்மனுவை அனுமதிப்பதால், எந்த வித கஷ்ட, நஷ்டமும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ஏற்படபோவதில்லை. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

<u>முடிவாக</u>

(i) மனுதாரர்/வாதி வரும் 03.07.2025 ஆம் தேதிக்கு முன்போ, பின்போ செலவு தொகையாக எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு ரூபாய் 500/–யை செலுத்தும்பட்சத்தில், இம்மனு அனுமதிக்கப்படும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

(ii) அழைக்க 03.07.2025.

TNTS0E0008882014

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 21ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.06.21 15:29:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை

**மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி :– இல்லை**

**மனுதாரர்/வாதி தரப்பு சாண்றாவணம் :– இல்லை**

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சாண்றாவணம் :–இல்லை**

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.06.21 15:29:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.

TNTS0E0008882014

மா.உ.நீ.ந. செங்கோட்டை
ஐ.ஏ. எண்.10/2025
(இன்)
ஓ.எஸ்.எண்.118/2014
உத்தரவு
நாள் **21.06.2025**